


# **F**RIDAY

# **SERMON**

**04 JANUARY 2019**

**(27 RABI'UL AAKKHIR 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

## "SPIRITUALITY AND MATERIALISM"

**"ஆன்மீகமும், லௌகீகமும்"**

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்∴பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**அ**ரபிகள் மற்றும் முஸ்லீம்கள் பொதுவாக ஆன்மீக நோக்கத்துடன் வாழும் மக்கள் என்றும் தொழிலாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் முக்கியத்துவம் அளித்து வரும் மேற்கு சமூகங்கள் அதாவது அமெரிக்கா மற்றும் ஐரோப்பியன் நாடுகள் லௌகீக நோக்கத்துடன் வாழும் மக்கள் என்றும் பொதுவான ஒரு நம்பிக்கை நம்மிடம் காணப்படுகிறது. இந்த நம்பிக்கை எந்த அளவிற்கு உண்மை?.

சில நேரங்களில் நமக்கு பார்க்கலாம். அதாவது மேற்கு நாடுகளில் உட்படாத ஜப்பான் மற்றும் தென்கொரியாவை இப்பட்டியலில் சேர்க்கப்படுகிறது. ஆனால் அநேக கிழக்கு ஐரோப்பியன் நாடுகளையும், லாத்தின் அமெரிக்கா நாடுகளையும் (Most East European and Latin American Countries) மேற்கு சமூகங்களின்ப்பட்டியலில் உட்படுத்துவதில்லை. மேற்கு என்பதின் அர்த்தம், முதலாளித்துவ மற்றும் சுதந்திர சமூகங்களாகும். ஆனால் அப்பட்டியலில் சோஸியலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் கலாச்சாரங்களை (Socialist and communist cultures) சேர்ப்பதில்லை. ஆன்மீகவாதிகளும், லௌகீகவாதிகளும் ஒருவருக்கொருவர் மோதுகின்றனர். ஆனால், ஆன்மீக நோக்கத்துடன் வாழும் சமூகத்தினரிலும், லௌகீக நோக்கத்துடன் வாழும் சமூகத்தினரிலும் மனிதாபிமான மதிப்பீடுகளில் சிறந்த நெறிமுறைகள் நிலை நிற்பதாக காணலாம். ஆன்மீகம் என்பதின் அர்த்தம், மனிதாபிமானம் மற்றும் நம்பிக்கை ஆகும். அதாவது கருணை, இரக்கம், சமூகஒற்றுமை மற்றும் மரணத்திற்கு பின்வரும் வாழ்க்கை மீதான நம்பிக்கை அத்துடன் அதன் தத்துவங்களை கடைப்பிடித்தலும் ஆகும்.

ஆன்மீகவாதம் மற்றும் லௌகீகவாதம் ஆகிய இரண்டும் தேடுவது மகிழ்ச்சியினை ஆகும். ஆன்மீகவாதம் தேடும் மகிழ்ச்சி என்பது இறைகருத்து மற்றும் இறைவல்லமை மீதான மகிழ்ச்சியினை ஆகும். ஆனால் லௌகீகம், இறை உதவியில்லாத மகிழ்ச்சியினை தேடுகிறது. இந்த அற்பமான உலகிற்காக நம்பிக்கையை கைவிடுகின்றனர். மிக சிறந்த முறையில் வாழ்வதற்கான அதாவது இன்னும் வெளிச்சம் நிறைந்த ஒரு வாழ்க்கைக்கான வழி முறைகளை ஆன்மீகவாதம் நமக்கு போதிக்கிறது. ஆனால் லௌகீகவாதமானது இன்னும் அதிகமான பொருட்கள் மற்றும் செல்வங்களை சேர்ப்பதற்கான வழிமுறைகளை நமக்கு கற்பிக்கிறது.

நிரந்திர மகிழ்ச்சியும், லௌகீகவாதமும் ஒரு போதும் ஒன்று சேர்வதில்லை. தன்னலமற்றவராக இருக்க ஆன்மீகம் நமக்கு கற்பிக்கிறது. ஆனால் சுயநலவாதியாக வாழ்வதற்கு லௌகீகவாதம் நமக்கு கற்பிக்கிறது. நம்முடைய சக மனிதனை நேசிப்பதற்கு ஆன்மீகம் நமக்கு கற்பிக்கிறது. ஆனால் லௌகீகவாதம், பௌதீக பொருட்களை நேசிப்பதற்கு நமக்கு கற்பிக்கிறது. ஆன்மீகவாதம்

எதையும் ஒப்பிடுவதில்லை. ஆனால் லௌகீக வாதமானது தொடர்ந்து ஒப்பீடுக்கு உட்பட்டதாக இருக்கிறது. லௌகீகவாதம் என்பது பொறாமை மற்றும் பாதுகாப்பின்மையின் தந்தையாகிறது. லௌகீக முன்னேற்றத்தின் உதவியினை ஆன்மீகம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் ஆன்மீகம் ஒரு போதும் லௌகீகத்தின் அடிமையல்ல. லௌகீக வாதத்திற்கு, ஆன்மீகம் எந்த அளவிற்கு உதவுகிறது என்பதை ஒரு போதும் கண்டு கொள்ள முடியாது.

ஆன்மீகம் நிகழ் காலத்தில் வாழுகிறது. ஆனால் லௌகீகம் நாளைய உலகில் வாழுகிறது. ஏனெனில் அதற்கு முடிவில்லாத ஆசைகள் இருப்பதால் அதை நிறைவேற்றுவதற்கு விரும்பிகிறது. அதைப்போன்றே கடந்த தினங்களின் அதிருப்தியினை எண்ணி அது வாழுகிறது. ஆன்மீகம் மன அமைதியினை அளிக்கிறது. ஆனால் உலகிலுள்ள அனைத்துச் செல்வங்களையும் பெற்றால் கூட லௌகீகத்திற்கு அமைதியினை பெற முடியாது.

லௌகீகவாதமானது அதன் குறுகிய வரம்புகள் மூலம் இறுதியில் அது விரக்தியடைகிறது. பின்னா அது ஆன்மீகத்தை தேடுகிறது. ஏனெனில் அதன் அளவற்ற ஆசைகளுக்கு முடிவு கட்டிட அது உண்மையான மகிழ்ச்சியைத் தேடுகிறது.

லௌகீகவாதம் என்பதன் பொருள் அதிகாரத்தின் அடிப்படையிலான நடத்தை ஆகும். அதாவது அடக்கு முறை, போட்டி இடுதல், இலவச பொருளாதார கொள்கை, ஏகாதிபத்தியம், தொழில் நுட்பம், மத நம்பிக்கையின்மை அதாவது மரணத்திற்கு பின்வரும் வாழ்க்கையில் மீதான நம்பிக்கையின்மை மட்டுமல்லாது பலன் வாய்ந்தவர்கள் பலவீனமானவர்களை கீழ்படிய வைத்து வாழும் முறை போன்றவையாகும். நமக்கு பொதுவான நம்பிக்கையில் செல்வோம். அரபிகள் மற்றும் முஸ்லீம்கள் பொதுவாக ஆன்மீக நம்பிக்கையுடையவர்கள் ஆவார்கள். மேற்கு மக்கள், லௌகீகவாதிகள் அதாவது லௌகீக நோக்கத்துடன் வாழும் மக்கள் ஆவார்கள். இந்த கருத்தின்பால் எட்ட அடிப்படையான அளவுகோல் என்ன?

இதற்கான பதில் எளிது. அரபிகள் மதசம்பந்தமான நம்பிக்கையுடையவர்கள் ஆவார்கள் அல்லது அவர்களை ஆட்சிச் செய்தது மதநம்பிக்கை ஆகும். ஆனால் மேற்கு மக்களை ஆட்சிச்

செய்தது பௌதீகமான விருப்பங்களாகும். முஸ்லீம்களை ஆட்சி செய்தது மதநம்பிக்கையாகும் என நாம் உரிமை கூறுகிறோம். அது உண்மை என்றிருந்தாலும் அவர்களை ஆட்சி செய்த மதம் யாது? அது உயரிய மதிப்புடைய மதமாக இருந்ததா? அல்லது வெளிப்படையானதும் தவறான சடங்குகளை கொண்டதுமான நம்பிக்கையாக இருந்ததா? அதற்க்கு சரியான ஒரு பதில் கிடைப்பதற்க்கு ஒரு உண்மையான முஸ்லீம் என்ன என்பதை நாம் வரையறுக்கவேண்டும். அரபியன் நாடுகள் மற்றும் அங்குள்ள குடிமக்களின் இஸ்லாமிய நம்பிக்கையைப் பற்றி நாம் ஆழமாக ஆராய வேண்டும். ஒரு உண்மையான முஸ்லீமும், ஒரு உண்மையான முஸ்லீம் நாடும் இஸ்லாமிய சட்டங்களுக்கு ஏற்றவாறு வாழ வேண்டும். வேறு வார்த்தைகளால் கூறுவோமேயானால், அல்லாஹ்வின் சட்டங்களுக்கு ஏற்றவாறு வாழ வேண்டும். அதாவது அல்லாஹ்வின் சட்டங்களுக்கும், திருக்-குர்-ஆனின் போதனைகளுக்கும், திரு நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளுக்கும் கட்டுப்பட்டு செயல்பட வேண்டும். அதுவே தவிர்க்க முடியாத ஆன்மீகம். உண்மையான நம்பிக்கை என்னும் உடன்படிக்கையை நாம் பாதுகாக்க வேண்டுமல்லவா? எல்லாம் வல்ல இறைவன் மீதான நம்பிக்கையை நாம் கடைபிடிக்கவேண்டுமல்லவா? நான் என்னும் ஆணவம் மற்றும் பௌதீகபொருட்கள் மீதான தாகம் ஆகியவற்றை நாம் தவிர்த்து கொள்ளவேண்டுமல்லவா?

இன்றைய அரபு நாடுகள் அருவருப்பான பணங்களை குவித்து வைத்துள்ளனர் என்பதை நமக்கு மறுக்க முடியாது. பௌதீக ஆசைகளை கட்டி தழுவியதன் மூலமும், ஆன்மீகத்தை கைவிட்டதன் மூலமும்தான் இத்தகைய பௌதீகமான செல்வங்கள் குவிந்து கொள்ள காரணமாகும். அரேபியன் சமூகங்களில் இன்று நாம் இரண்டு காரியங்களை பார்க்கிறோம். ஒன்று நம்பிக்கையின் காரியத்தில் அவர்கள் மிக தீவிரமாக இருப்பது மற்றொன்று பௌதீகமான ஆசைகள் மீது அவர்கள் ஆர்வமாக இருப்பது. இத்தகைய மக்கள் மிக தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறாக அமைகிறது. அவர்கள் தங்களது மதம் மற்றும் நம்பிக்கைக்கு சொந்த விருப்பப்படி வரையறை அளிக்கின்றனர். அதுவே உண்மை என அவர்கள் கூறுகின்றனர். அது மூலம் பிற மக்கள் முன்னிலையில்

அவர்கள் கடுமையானவர்களாக மாறுகின்றனர். இக்காரணத்தால் இஸ்லாம் ஒரு கெட்ட உருவமாக மாறுகிறது. உண்மையில் இஸ்லாம் என்பது அமைதியின் மார்க்கம் ஆகும். அது மட்டுமே சரியான நம்பிக்கையாகும்.

உதாரணமாக கடந்த சில வருடங்களாக நாம் தாலிபனையும், இஸ்லாமிக் ஸ்டேற் ஆப் இராக், மற்றும் சிரியாவை [The Talibam and the Islamic state of Iraq and Syria (ISIS)] காண்கின்றோம். இஸ்லாமிற்கு தவறான ஒரு கண்ணோட்டத்தை அளிக்குமாறு அவர்கள் செயல்படுகின்றனர். அவர்கள் மார்க்கத்தின் பெயரில் முற்றிலும் வெளிப்படையான சடங்கு சம்பிரதாயங்களை செய்து வருகின்றனர். இஸ்லாமின் சிறந்த மதிப்பீடுகள் ஆகிய நீதி, சுதந்திரம், சமத்துவம், கண்ணியம் போன்றவையை அவர்கள் தூக்கி வீசிவிட்டனர்.

பெரும்பாலான அரபு சமூகங்களிலும் இன்று உறவுகள் அமைவது, அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் அதைப்போன்றே பாரபட்சம் மற்றும் சுய விருப்பத்தை அடிப்படையாக்கி கொண்டும் ஆகும். இது ஒரு உண்மையாகும். இத்தகைய உறவுகளை வடிவமைப்பதற்கு பொருளாதாரம் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. பெரும்பாலான அரபு நாடுகளும் அடக்கு முறைகளின் வடிவமாக மாறிவிட்டது. அதிகாரம் என்பது மிகுந்த மதிப்புடைய ஒரு கருத்து என இஸ்லாமின் வருகைக்கு முன்பே எழுதப்பட்ட அநேக அரபிகவிதைகளில் காணலாம். சிறுபான்மையின சமுகத்தை கவனிப்பதில்லை, அவர்களுக்கு எவர்களிடமிருந்தும் எந்த ஆதரவும் கிடைப்பதில்லை. நமது சமூகத்தை சார்ந்த சிறுபான்மையின மக்கள் மிக அதிகமாக துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

நமக்கு மேற்கு சமூகங்களை பார்ப்போம். உண்மையில் மேற்கு சமூகங்கள் பௌதீக நோக்கத்துடன் வாழும் மக்களா? ஆம் என பதில் கூறுகின்றீர்களேயானால், அது எந்த அளவிற்கு? பொதுவாக கூறினால் சுதந்திர சமூகங்கள் ஆன்மீகவுமாக தொடர்பில்லாதவர்களாக இருக்கின்றனர். மேற்கு நாடுகளை சார்ந்த மக்களில் பெரும்பாலான மக்களும் லௌகீக வாதிகளாகயிருந்தாலும் மெல்ல மெல்ல அவர்கள் ஆன்மீகத்தின் பால் திரும்பிவிடுவார்கள். ஆன்மீகத்தின் மிக சிறந்த வடிவம் இஸ்லாமிற்குரியது. இத்தகைய சமூகங்களை சார்ந்த மக்கள்

தங்களது அன்றாட வாழ்வில் ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து வருகின்றனர். இன்ஷா அல்லாஹ்! நான் பிரார்த்தனை செய்கிறேன். நேரம் நெருங்கி விட்டது. மேற்கு நாட்டு மக்கள் உண்மையான ஆன்மீகத்தின் பால் நுழைவார்கள். ஆன்மீகத்தின் மிக சிறந்த வழி இஸ்லாம் ஆகிறது. எல்லாம் வல்ல இறைவனிடம் தொடர்பை ஏற்ப்படுத்த முற்றிலும் சிறந்த வழி இதுவே என நிரூபணமாகிவிடும். இது அல்லாஹ்வின் உத்தரவாக இருக்கிறது.

முதலாளித்துவமும், இலவச சந்தைப் பொருளாதாரமும் மேற்குமக்களின் விதியினை கூறும் ஒன்றாக அமைந்துள்ளது. எனினும் மேற்கு நாடுகள் ஒரு மாற்றத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்பது நாம் உணர்ந்த ஒரு உண்மையாகும். இலவச சந்தைப் பொருளாதாரத்தின் ஆதிக்கம், ஒரு போதும் மேற்கு மக்களின் ஆன்மீகத்திற்க்கும் அதைப் போன்றே மனித நேய மதிப்பீடுகளாகிய நீதி, சுதந்திரம், சமத்துவம், சமூக ஒற்றுமை ஆகியவற்றிற்க்கும் தடையாக இருக்கவில்லை. இது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும்.

**இறுதியாக கூறுகின்றேன் ஆன்மீகம் அல்லது மனிதாபிமானத்தை நாம் புரிந்துக் கொண்டால், ஆன்மீகம் என்றால் அதன் பொருள் மனித கண்ணியம் என நாம் பகுத்தறிந்து விட்டால், அந்நிலையில் நாம்தான் லௌகீக மக்கள் என்றும் மேற்கு நாடுகளை சார்ந்தவர்கள் ஆன்மீக மக்கள் என்றும் நமக்கு உணர்ந்து விடலாம். ஏனெனில் விலைவாய்ந்த நீதி மற்றும் கண்ணியத்தை பாதுகாப்பதற்கு பதிலாக நமது சமுதாயங்களில் ஒடுக்கு முறை நிலவுகிறது. கண்ணியத்திற்கு பதிலாக ஏகாதிபத்தியமும் அமைதிக்கு பதிலாக அன்னியாயமும் இடம்பிடித்து விட்டது.**

எனவே முஸ்லீம்கள் மற்றும் அரபி நாடுகள் மட்டுமன்றி அனைத்து மக்களும் மிக கவனமாக இதைக் குறித்து சிந்திக்கவேண்டும். நமது லௌகீகமான இந்த விதியினை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். இது (இஸ்லாம்) அல்லாஹ் நமக்கு அளித்த பரிசாகும். அல்லாஹ் நமக்கு இஸ்லாமின் பால் வழிகாட்டிய வேளையில் அவன் நம்பிக்கையுடன் நமக்கு அளித்த “அமானத்தை” நாம் பாதுகாக்க வேண்டும். அவன் நமக்கு அளித்த அந்த இஸ்லாமை நாம் மதிக்க வேண்டும். ஆன்மீகத்தின் மிக சிறந்த வடிவமான

இஸ்லாமை அவன் நமக்கு வழங்கியிருக்கின்றான். அவனை அடைவதற்கான மிக சிறந்த வழியை நமக்கு அவன் காட்டியிருக்கின்றான். முழுமையான நல்லொழுக்கத்தினாலும் மனிதாபிமானத்தினாலும் அவனை அடைவதற்கும் பிற மக்களையும் அவனிடம் எட்ட வைப்பதற்குமான வழிகளை திறந்திடுங்கள். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

இன்றைய முஸ்லீம்களின் விதிக்கு அல்லாஹ் ஒரு மாற்றத்தை ஏறப்படுத்தட்டும். அவர்களை உண்மையான இஸ்லாமின் பால் திருப்பிக் கொள்ளட்டும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் காலக்கட்டத்திலுள்ள சரியான இஸ்லாமின் பால் அவர்கள் திரும்பி விடட்டும். நமது சமுதாயங்களுக்கு, முஹம்மது (ஸல்) அவர்களின் காலக்கட்டத்திலுள்ள சமுதாயங்களுக்கு நிகழ்ந்தது போல் மாற்றம் ஏற்படட்டும். நமது களங்கமற்ற முயற்சிகள்யாவும் அந்த நோக்கத்துடன் அமையட்டும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**
*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**